## (ஒ) தொழில் நிலையும் தொழில் உறவுகளும்

### 1. தொழில்காண் நிலையங்களால் தொழில் பெற்றோர் எண்ணிக்கை

*1961 முதல் 1973 வரை தொழில் காண் நிலையங்களால் தொழிலில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையின் ஆண்டு எண் தொகைகள் அட்டவணை II (ஒ) 1ல் தரப்பட்டுள்ளன. 1974 இல் தொழில் காண் நிலையங்களால் தொழிலில் அமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை 1278 ஆகும். 1974ல் தொழிலில் அமர்த்தப்பட்ட எல்லாவகைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிலும் பார்க்க 51.3 சதவீதத்தால் குறைந்ததாகும்.*

அட்டவணை II (ஒ) 1

தொழிலில் அமர்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கையும் ஒவ்வொரு பகுப்பிலும் பதிவு செய்யப்பட்டோரின் மொத்தத் தொகையில் அவர்களின் தொடர்பான முக்கியத்துவமும்

| ஆண்டு | தொழில்நுட்ப, எழுதுவினைஞர் | | தேர்ச்சிபெற்றோர் | | ஓரளவு-தேர்ச்சி பெற்றோர் | | தேர்ச்சிபெறுதோர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் | அமர்த்தப் பட்டோரின் எண்ணிக்கை | பகுப்பினுள் மொத்தப் பதிவு செய்தோரின் சதவீதம் |
| 1961 | 1,259 | 4.6 | 631 | 3.5 | 964 | 2.8 | 2,794 | 3.9 | 5,648 | 3.7 |
| 1962 | 1,263 | 3.7 | 468 | 2.7 | 809 | 2.3 | 2,315 | 3.5 | 4,857 | 3.2 |
| 1963 | 1,322 | 3.7 | 502 | 3.0 | 836 | 2.3 | 2,466 | 3.9 | 5,129 | 3.4 |
| 1964 | 1,722 | 4.4 | 535 | 3.2 | 945 | 2.5 | 3,599 | 5.5 | 6,801 | 4.3 |
| 1965 | 1,495 | 2.7 | 846 | 4.2 | 1,035 | 2.1 | 3,753 | 5.0 | 7,129 | 3.6 |
| 1966 | 1,056 | 1.6 | 740 | 3.4 | 917 | 1.5 | 4,089 | 4.5 | 6,802 | 2.9 |
| 1967 | 1,018 | 1.4 | 588 | 2.5 | 712 | 1.1 | 1,936 | 2.1 | 4,254 | 1.7 |
| 1968 | 680 | 0.9 | 780 | 3.1 | 794 | 1.1 | 2,696 | 2.6 | 4,950 | 1.8 |
| 1969 | 865 | 1.0 | 710 | 2.3 | 800 | 0.9 | 2,908 | 2.1 | 5,283 | 1.5 |
| 1970 | 526 | 0.5 | 584 | 1.5 | 428 | 0 4 | 1,287 | 0.7 | 2,825 | 0.7 |
| 1971 | 640 | 0.6 | 778 | 1.8 | 462 | 0.5 | 1,701 | 0.9 | 3,581 | 0.8 |
| 1972 | 612 | 0.7 | 529 | 1.2 | 656 | 0.6 | 1,496 | 0.7 | 3,293 | 0.7 |
| 1973 | 561 | 0.6 | 385 | 0.9 | 413 | 0.4 | 1,350 | 0.6 | 2,622 | 0.6 |
| *1974 | 294 | 0.3 | 188 | 0.4 | 249 | 0.2 | 547 | 0.2 | 1,278 | 0.3 |

* தற்காலிகமானவை

மூலம்: தொழிற்றிணைக்களம்.

### 2. அரசுத்துறையின் தொழில் நிலை

*(அரசுக் கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், நியதிச்சட்டசபைகள் என்பன.)*

தொழில்பற்றி அரசு சார் நிலையங்கள் அரசு சேவை என்பனவற்றின் மீது மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட 1974 ஆம் ஆண்டு அளவீட்டிற்கான பதில் நிறைவுடையதாகவுள்ளது. விசாரணைகட்குப் பதில் அளிக்காத அரசத்

திணைக்களங்களின் எண்தொகைகள் 1973க்கான அரசிறை, செலவீடு என்பன வற்றின் மதிப்பீடுகளினின்று பெறப்பட்டன. இவைகள் ஆய்ந்தளிக்கப்பட்ட ஊழியர் கோப்பினைத் தந்தன. ஆனல் உண்மையான தொழிலின் எண்தொகை களைத் தரவில்லை. கேள்விக் கொத்துகட்குப் பதில் அளிக்காத 14 அரசசார் நிறுவனங்களின் தொழில் நிலை எண்தொகைகள் முன்னைத் தரவுகளைப் பயன் படுத்தி மதிப்பீடு செய்யப்பட்டன.

ஊழியர்கள் அவர்களின் தகைமை வகை என்பனவற்றிற்கேற்பப் பாகுபாடு (நிலையான, தற்காலிக, அமைய) செய்யப்பட்டுள்ளனர். கணக்கிலெடுக்கப்பட்ட பாகுபாடுகளாவன:-

1. உயர் அலுவலர் தரத்திலுள்ள தொழில்நுட்ப நிருவாக தொழிலுக் குரிய அலுவலர்கள்

2. கீழமைந்த ஊழியர்கள்

3. சிற்றூழியர்கள்

4. பள்ளிக்கூட ஆசிரியர்கள் (அரசு திணைக்களங்களைப் பொறுத்தவரை)

5. ஏனையவர்கள்

(அ) அரசத் திணைக்களங்கள்

1973, 1974 ஆம் ஆண்டுகட்கான அரசத் திணைக்களங்களின் தொழில்நிலை யின் மதிப்பீடுகள் அட்டவணை II ஒ) 2ல் தரப்பட்டுள்ளன.

1974இல் அரச திணைக்களங்களின் மொத்த ஊழியர்களின் மொத்த எண் ணிக்கை 7.5 சதவீதத்தால் உயர்ந்திருந்தது. கீழமைந்த தரத்தில் பதிவுசெய் யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையின் உயர்ச்சியே மிகவும் உயர்ந்ததாகும். அது 1973இன் தொகையை 12.8 சதவீதத்தால் விஞ்சியது. 1974இல் நிரு வாகதரத்தின் ஊழியர்கள் சிற்றூழியர்கள் பள்ளிக்கூட ஆசிரியர்கள் உயர்ச்சி முறையே 10.9, 7.6, 1.2 சதவீதத்தால் அமைந்தது.

1974இல் அரச திணைக்களங்களின் மொத்த எண்ணிக்கை ஊழியர்களில் ஏறக்குறைய 62 சதவீதமானேர் கீழமைந்த, சிற்றூழியர் தரங்களில் இருந்த னர். மொத்த எண்ணிக்கை ஊழியர்களில் அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் 26 சதவீதத்தைப் பெற, உயர் அலுவலர் தரத்தின் அலுவலர்களின் எண் ணிக்கை 3.7 சதவீதமாகும்

1974ல் அரச திணைக்களங்களின் நிலையான ஊழியர்களின் வீதமானது, 1973இன் 88.4 சதவீதத்திலிருந்து 86 8 சதவீதமாகக் குறைய, தற்காலிக ஊழியர்களின் வீதம் 5.6லிருந்து 5.8 ஆக உயர்ந்தது. ஆண்டுப் பிரிவில் அமைய ஊழியர்களின் வீதம் 6.0லிருந்து 7.5 சதவீதமாக உயர்ந்தது.

## அட்டவணை II (ஓ) 2

## தொழில்நிலைபற்றிய புள்ளிவிவரங்கள் — அரசத்திணைக்களங்கள்*

| தொழில்பகுப்பு | தரமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் | | | | | | | | 1973க்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிரந்தரமான | | தற்காலிகமான | | அமைவு | | மொத்தம் | | |
| | 1973 திசெம். 31 | 1974 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1974 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1975 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1974 திசெம். 31 | 1973 |
| 1. உயர் அலுவலர் தரத்திலுள்ள நிர்வாக, தொழில்நுட்ப தொழில சார்ந்த அலுவலர்கள் | 13,643 | 14,072 | 387 | 1,487 | — | — | 14,030 | 15,559 | + 10.9 |
| 2. கீழமைந்த ஊழியர்கள் | 120,236 | 135,593 | 5,498 | 5,804 | 4,604 | 5,603 | 130,338 | 147,000 | + 12.8 |
| 3. சிற்றூழியர்கள் | 69,499 | 69,897 | 14,972 | 15,715 | 17,856 | 24,503 | 102,327 | 110,115 | + 7.6 |
| 4. பள்ளிக்கூட ஆசிரியர்கள் | 106,674 | 107,979 | — | — | — | — | 106,674 | 107,979 | + 1.2 |
| 5. ஏனையோர் | 31,259 | 32,534 | 782 | 1,035 | 611 | 833 | 32,652 | 32,402 | + 5.4 |
| மொத்தம் | 341,311 | 360,075 | 21,639 | 24,041 | 23,071 | 30,939 | 386,021 | 415,055 | + 7.5 |

மூலம்; இலங்கை மத்திய வங்கி.

*குறிப்புகள்:

1. (i) சட்டவாக்க அலுவலர்களும், அரசாங்க நிருவாகிகளும்.
   (ii) முகாமையாளர், தலைவர், ஏனைய உயர்பதவி அலுவலர்கள்.
   (iii) விஞ்ஞானிகள், தொழில் நுட்பவாளர்கள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள். பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கணக்காளர்கள், மதிப்பாளர்கள்.

2. (i) எழுதுவினைஞர் தரங்கள்.
   (ii) காசாளர்கள்.
   (iii) சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், லைசபர் இயந்திர இயக்குநர்கள்.
   (iv) தொலைபன்னி இயக்குநர்களும், அலுவலக எந்திர இயக்குநர்களும்.
   (v) மொழிபெயர்ப்பாளர்கள்.
   (vi) நீடிப்புப் பரிசோதகர்களும் விசாரணை அலுவலர்களும்,
   (vii) காவலர்களும், கிராம சேவையாளர்களும்,
   (viii) களஞ்சியக் காப்பாளர்

3. (i) செய்தி அறிவிப்பாளர்கள்.
   (ii) பணியாளர்.
   (iii) கவனிபபாளரும் ஏவலாளரும்.
   (iv) சாரதிகள் (மோட்டார் வாகனங்கள், லொறிகள் முதலியன.)
   (v) பயிற்சி பெறாத தொழிலாளர்கள்.
   (vi) ஓரளவு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள்.
   (vii) பயிற்சிபெற்ற தொழிலாளர்கள்.

4. (i) முதல்வர்கள், துணை முதல்வர்கள், தலைமை ஆசிரியர்களும், உதவித் தலைமையாசிரியர்களும்.
   (ii) பயிற்சி ஆசிரியர்களாகத் தகைமை பெற்றோர், தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்களும். ஆங்கிலத் தராதரம் பெற்ற ஆசிரியர்களும்.
   (iii) பட்டதாரிகள், இடைநிலைக் கலைப்பிரிவினர்.
   (iv) சிறபபுத் தகுதி பெறாதோர், பகுதி நேர, நாட்சம்பள, ஆசிரியர்களும், பயிற்சிப் பெறும் ஆசிரியர்களும், மாணவ ஆசிரியர்களும்.

**(ஆ) அரச சார்புடை நிறுவனங்கள்**

1974ல் அரச சார்புடை நிறுவனங்களின் தொழிலமைவு 1973 இன் 4.6 சதவீத உயர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13 8 சதவீதத்தால் உயர்ந்திருந்தது. அட்டவணை II (ஓ) 3ல் கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின்படி இவ்வுயர்ச்சிக் கான காரணம்; சிற்றூழியர் தரத்தில் ஏற்பட்ட விரைவான உயர்ச்சியே எனத் தெரிகிறது. இத்தரத்தில் 1974 க்கான உயர்ச்சி 23.4 சதவீதமாக அமைய

**அட்டவணை II (ஓ) 3**

**தொழில்நிலைப் புள்ளிவிவரங்கள் – அரசசார்புடைய நிலையங்கள்(அ)***

| | தரமும் தொழிலிலமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கையும் | | | | | | | | 1973ற்கு மேலான சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிரந்தரம் | | தற்காலிகம் | | அமைவு | | மொத்தம் | | |
| | 1973 திசெம். 31 | 1974 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1974 திசெம். 31 | 1973 திசெம். 31 | 1974 திசெம். 31 | 1973 திசெம் 31 | 1974 திசெம். 31 | |
| 1. நிருவாக, தொழில் நுட்ப, பயில் தொழில் அலுவலர்கள் ... | 14,668 | 15,220 | 568 | 629 | 124 | 140 | 15,360 | 15,989 | + 4.1 |
| 2. கீழமைந்தஊழியர்கள் | 30,021 | 31,618 | 525 | 557 | 630 | 827 | 31,176 | 33,002 | + 5.9 |
| 3. சிற்றூழியர்கள் ... | 89,162 | 116,162 | 10,655 | 10,953 | 20,525 | 21,433 | 120,342 | 148,548 | + 23.4 |
| 4. ஏனையோர்கள் ... | 41,325 | 39,703 | 420 | 365 | 983 | 1,023 | 42,728 | 41,091 | — 3.8 |
| 5. **மொத்தம்** | 175,176 | 202,703 | 12,168 | 12,504 | 22,262 | 23,423 | 209,606 | 238,630 | + 13.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு (அ)

1. (i) சட்டதுறை அலுவலர்களும், அரசாங்க நிர்வாகிகளும்.
   (ii) முகாமையாளர், தலைவர், ஏனைய உயர்பதவி அலுவலர்கள்.
   (iii) விஞ்ஞானிகள், தொழில் நுட்பவாளர்களும், வைத்தியர்கள், பேரசிரியர்களும், விரிவுரையாளர்களும், கணக்காளர்களும், மதிப்பாளர்களும்.
2. (i) எழுதுவினைஞர் தரங்கள்.
   (ii) காசாளர்கள்.
   (iii) சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்களும், சைபர் இயக்குநர்களும்.
   (iv) தொலைபன்னி இயக்குநர்களும், அலுவலக எந்திர இயக்குநர்களும்.
   (v) மொழிபெயர்ப்பாளர்கள்.
   (vi) நீடிப்புப் பரிசோதகர்களும், விசாரணை அலுவலர்களும்.
   (vii) காவலர்களும், கிராம சேவகர்களும்
   (viii) களஞ்சியக் காப்பாளர்கள்.
3. (i) செய்தி அறிவிப்பாளர்கள்
   (ii) அலுவகப் பணியாளர்.
   (iii) கவனிப்பாளர்களும், ஏவலாளர்களும்.
   (iv) சாரதிகள் (மோட்டார் வாகனங்கள், லொறிகள் முதலியன.)
   (v) பயிற்சிபெறாத வேலையாட்கள்.
   (vi) ஓரளவு பயிற்சி பெற்ற வேலையாட்கள்.
   (vii) பயிற்சி பெற்ற வேலையாட்கள்.

* பொதுக் கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகம், சபைகள்.

1973 இன் ஒப்பிடக்கூடிய எண்தொகை 6.4 சதவீதமாகும். எனினும், மற்றத் தரங்களின் தொழிலமைவு வளர்ச்சி 1973 ஐ விட மிகவும் குறைவாகும். எடுத்துக்காட்டாக நிருவாக, வாழ்க்கைத் தொழிலுக்குரிய தொழில்நுட்ப, என்ற தரங்களின் முன்னைய ஆண்டின் உயர்ச்சியான 7.2 சதவீதத்துடன் ஒப்பு நோக்குகையில் 1974ன் உயர்ச்சி 4.1 சதவீதமாக அமைகிறது.

1974ல் அரசு சார்புடைய நிலையங்களில் ஏறக்குறைய 85 சதவீதமான ஊழியர் நிலையான பதவி அணியில் அமர்ந்திருக்கையில் அமைய, தற்காலிக ஊழியர்களின் எண்ணிக்கை மொத்தத்தில் முறையே 10 சதவீதமாகவும் 5 சதவீதமாகவும் அமைந்தது.

## 3. தொழில் நாடிப் பதிந்தவர்கள்

1974 முடிவில் தொழில் காண் நிலையங்களில் தொழில் நாடி அல்லது சிறந்த தொழிலிற்காகப் பதிவுசெய்தவர்களின் எண்ணிக்கை 505,935 ஆக விளங்க ஒப்புநோக்குகையில் சென்றவாண்டின் இறுதியில் (அட்டவணை II (ஓ) 8 ஐப் பார்க்க) எண்ணிக்கை 470,369 ஆகும். எல்லா வகையான தொழிலினையும் குறித்து, பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இத்தகைய போக்கு 1973 ஆம் ஆண்டிலும் காணப்பட்டது.

அட்டவணை II (ஓ) 4

**நாட்டின் தொழிலிணைப்பு நிலையங்களின் பதிவேடுகளின்படி தொழில் அல்லது நல்ல தொழில் நாடிப் பதிவு செய்தோரின் எண்ணிக்கை**

| | கால முடிவுக்குரிய எண்தொகைகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | தொழில்நுட்ப, எழுது வினைஞர் | தேர்ச்சி பெற்ற | ஓரளவு தேர்ச்சிபெற்ற | தேர்ச்சி பெறுத | மொத்தம் |
| 1972 திசெம்பர் .. | 89,170 | 43,234 | 101,554 | 211,464 | 445,422 |
| 1973 மாச்சு .. | 85,847 | 43,017 | 104,003 | 216,281 | 449,148 |
| யூன் ... | 86,585 | 43,342 | 105,271 | 221,213 | 456,411 |
| செத்தெம்பர் .. | 85,828 | 43,676 | 105,978 | 227,220 | 462,702 |
| திசெம்பர் ... | 86,341 | 43,689 | 107,367 | 232,972 | 470,369 |
| 1974 மாச்சு ... | 87,111 | 43,731 | 109.332 | 237,038 | 477,212 |
| யூன் .. | 8852,3 | 44,570 | 112,100 | 242,189 | 487,382 |
| *செத்தெம்பர் .. | 90,292 | 45,506 | 114,080 | 245,901 | 494,846 |
| *திசெம்பர் .. | 92,120 | 46,043 | 116,882 | 250,890 | 505,935 |

*தற்காலிகமானவை.

மூலம்: தொழிற்றிணைக்களம்.

## 4. தொழில் உறவுகள்

தனியார் துறையில் 1974 இன் வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை, கலந்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை, இழந்த ஆள் நாட்கள் எண்ணிக்கை என்பனவற்றின் தரவினை அட்டவணை II (ஓ) 5 தருகின்றது.

### அட்டவணை II (ஓ) 5

### தனியார்துறை வர்த்தகங்களில் வேலை நிறுத்தங்கள்

| ஆண்டு | பெருந்தோட்டங்கள் | | | ஏனைய தொழில்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கு பற்றிய வேலையாட்கள் | இழந்த ஆள் வேலைநாட்கள் | வேலை நிறுத்தங்களின எண்ணிக்கை | பங்கு பற்றிய வேலைநாட்கள் | இழந்த ஆள் வேலைநாட்கள் |
| 1961 ... | 90 | 29,223 | 317,866 | 39 | 38,013 | 170,372 |
| 1962 ... | 138 | 42,569 | 193,792 | 50 | 25,730 | 801,882 |
| 1963 ... | 174 | 62,511 | 359,905 | 58 | 29,819 | 479,678 |
| 1964 ... | 201 | 68,009 | 611,060 | 103 | 21,409 | 274 623 |
| 1965 .. | 175 | 70,929 | 482,259 | 55 | 10,085 | 89,952 |
| 1966 ... | 132 | 138,259 | 4,117,264 | 32 | 4,592 | 34,351 |
| 1967 .. | 194 | 74,968 | 414,636 | 36 | 14,883 | 284,709 |
| 1968 ... | 171 | 65,909 | 722,690 | 26 | 11,308 | 265,726 |
| 1969 .. | 146 | 56.861 | 406,150 | 43 | 6,317 | 58,015 |
| 1970 ... | 254 | 125,530 | 1,030,310 | 86 | 23,488 | 281,253 |
| 1971 ... | 125 | 50,847 | 273,531 | 32 | 39,958 | 239,760 |
| 1972 ... | 165 | 52,832 | 273,717 | 22 | 2,205 | 25,181 |
| 1973 ... | 215 | 89,393 | 360,217 | 23 | 4,263 | 30,582 |
| *1974 ... | 75 | 25,381 | 78,928 | 16 | 1,692 | 26,816 |

* தற்காலிகமானவை

மூலம்: தொழிற்றிணைக்களம்.

பெருந்தோட்டங்களில் 1973 ல் நடைபெற்ற 215 வேலை நிறுத்தங்களுடன் ஒப்புநோக்குகையில், 1974 இன் வேலை நிறுத்தங்கள் 75 ஆகும். இது 65 சதவீதக் குறைவினைக் காட்டுகிறது. வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 1973 இல் 89393 லிருந்து 1974 ல் 25381 ஆகக் குறைவுற்றது. இவ்வாண்டில் குறைவுற்ற இழக்கப்பட்ட ஆள் நாட்களின் எண்ணிக்கை 281,289 ஆகும். வேறு தொழில் நிலையங்களில் வேலை நிறுத்தங்களில் கலந்து கொண்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையும் இழந்த ஆள் நாட்கள் எண்ணிக்கையும் முறையே 2571 ஆகவும் 3736 ஆகவும் குறைவுற்றன.

1974 இல் பொது தொழில் நிலைமைகளில் முன்னேற்றங்கட்கான கோரிக்கைகளைக் காட்டிலும் கூலி உயர்ச்சிக்கான கோரிக்கை, வேலை நிறுத்தங்கட்கு மிகவும் குறைந்த காரணமாக அமைந்தது. ஏறக்குறைய 57 சதவீதமான வேலை நிறுத்தங்கள் சிறந்த தொழில் அமைப்புகள் இளம்படி அலுவலர்களுடனான பிணக்குகளையொட்டிய கோரிக்கைகளைப் பொறுத்து அமைந்தன. 1974 இன் மொத்த வேலை நிறுத்தங்களில் 25 சதவீதம் உணவு தொடர்பாகவும் 7 சதவீதம் தொழில் இழப்பினையொட்டியும் அமைந்தன.